# Padasalai's Telegram Groups!

( தலைப்பிற்கு கீழே உள்ள லிங்கை கிளிக் செய்து குழுவில் இணையவும்! )

- Padasalai's NEWS - Group
https://t.me/joinchat/NIfCqVRBNj9hhV4wu6_NqA

- Padasalai's Channel - Group
https://t.me/padasalaichannel

- Lesson Plan - Group
https://t.me/joinchat/NIfCqVWwo5iL-21gpzrXLw

- 12th Standard - Group
https://t.me/Padasalai_12th

- 11th Standard - Group
https://t.me/Padasalai_11th

- 10th Standard - Group
https://t.me/Padasalai_10th

- 9th Standard - Group
https://t.me/Padasalai_9th

- 6th to 8th Standard - Group
https://t.me/Padasalai_6to8

- 1st to 5th Standard - Group
https://t.me/Padasalai_1to5

- TET - Group
https://t.me/Padasalai_TET

- PGTRB - Group
https://t.me/Padasalai_PGTRB

- TNPSC - Group
https://t.me/Padasalai_TNPSC

**பருவம்: 1 வகுப்பு: 8 இயல்: 1 1.1 தமிழ்மொழி வாழ்த்து**

**அ) குறுவினா**

**1)தமிழ் எங்கு புகழ் கொண்டு வாழ்கிறது?**

- தமிழ் ஏழு கடல்களால் சூழப்பட்ட நிலப்பகுதி முழுவதும் தன் இலக்கிய மணத்தைப் பரவச் செய்து புகழ்கொண்டு வாழ்கிறது.

**2) தமிழ் எவற்றை அறிந்து வளர்கிறது?**

- தமிழ் ஆகாயத்தால் சூழப்பட்ட எல்லாவற்றையும் அறிந்து உரைக்கும் வளமான தமிழ்மொழியாக வளர்கிறது.

**ஆ) சிறுவினா**

**1) தமிழ் மொழியை வாழ்த்திப் பாரதியார் கூறும் கருத்துகள் யாவை?**

- தமிழ் மொழியை வாழ்த்திப் பாரதியார் கூறும் கருத்துகள்:
- தமிழ்மொழி எக்காலத்தும் நிலைபெற்று வாழ்க.
- வளமான தமிழ்மொழி வாழ்க.
- மேன்மேலும் வளரும் தமிழ்மொழி வாழ்க.
- இலக்கிய மணத்தை பரவச் செய்து புகழ்கொண்ட தமிழ்மொழி வாழ்க.
- என்றென்றும் தமிழ்மொழி வாழ்க.
- அறியாமை இருள் நீங்கி உலகம் முழுவதும் சிறப்படைக.
- துன்பங்கள் நீங்கித் தமிழ்நாடு ஒளிர்க.
- உலகம் உள்ள வரையிலும் தமிழ்மொழி வாழ்க.

**1.2தமிழ்மொழி மரபு**

**அ) குறுவினா**

**1)உலகம் எவற்றால் ஆனது?**

- உலகம் நிலம், நீர், தீ, காற்று, வானம் ஆகிய ஐந்தும் கலந்த கலவையால் ஆனது.

**2) செய்யுளில் மரபுகளை ஏன் மாற்றக்கூடாது?**

- செய்யுளில் மரபுகளை மாற்றினால் பொருள் மாறிவிடும்.
- அதனால் செய்யுளில் மரபுகளை மாற்றக்கூடாது.

**ஆ) சிறுவினா**

**1)தமிழ்மொழியின் மரபு குறித்துத் தொல்காப்பியர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.**

- இவ்வுலகம் நிலம், நீர், தீ, காற்று, வானம் ஆகிய ஐந்தும் கலந்த கலவையாகும்.
- இவ்வுலகில் தோன்றிய பொருள்கள் அனைத்தும் இந்த ஐம்பூதங்களின் சேர்க்கையால் உருவானவையே ஆகும்.
- உலகத்துப் பொருள்களை இரு திணைகளாகவும், ஐம்பால்களாகவும் பாகுபடுத்திக் கூறுதல் தமிழ்மொழியின் மரபு.
- திணை, பால் வேறுபாடு அறிந்து, இவ்வுலகப் பொருள்களை நம் முன்னோர் கூறிய சொற்களால் கூறுதல் வேண்டும்.
- இம்மரபான சொற்களையே செய்யுளிலும் பயன்படுத்துதல் வேண்டும்.
- தமிழ்மொழிச் சொற்களை வழங்குவதில் இம்மரபு மாறினால் பொருள் மாறிவிடும்.

B. SANGEETHA M.A., M.PHIL., TAMIL TEACHER

## உரைநடை 1.3 தமிழ் வரிவடிவ வளர்ச்சி

**அ) குறுவினாக்கள்:**

**1)ஓவிய எழுத்து என்றால் என்ன?**

**ஓவிய எழுத்து:**

- தொடக்க காலத்தில் எழுத்து என்பது ஒலியையோ, வடிவத்தையோ குறிக்காமல் பொருளின் ஓவிய வடிவமாகவே இருந்தது.
- இவ்வரி வடிவத்தை ஓவிய எழுத்து என்பர்.

**2)ஒலி எழுத்து நிலை என்றால் என்ன?**

**ஒலி எழுத்து நிலை:**

- ஓர் ஒலிக்கு ஓர் எழுத்து என உருவான நிலையை ஒலி எழுத்து நிலை என்பர்.

**3)ஓலைச்சுவடிகளில் நேர்கோடுகள், புள்ளிகள் ஆகியவற்றைப் பயன்படுத்த இயலாமைக்குக் காரணம் என்ன?**

**ஓலைச்சுவடிகளில் நேர்கோடுகள், புள்ளிகள் ஆகியவற்றைப் பயன்படுத்த இயலாமைக்குக் காரணம்:**

- ஓலைச்சுவடிகளில் புள்ளிபெறும் எழுத்துகளை எழுதும் போது ஓலைச்சுவடி சிதைந்துவிடும் என்பதால் புள்ளி இடாமல் எழுதினர்.
- மேலும் ஓலைச்சுவடிகளில் நேர்கோடுகளையும் புள்ளிகளையும் எழுதுவது கடினம்.

**4)வீரமாமுனிவர் மேற்கொண்ட எழுத்துச் சீர்திருத்தங்களில் எவையேனும் இரண்டனை எழுதுக.**

- எகர, ஒகர வரிசை எழுத்துகளில் புள்ளிகளால் ஏற்படும் குழப்பங்களை அவர் களைந்தார்.
- எ என்னும் எழுத்திற்குக் கீழ்க்கோடிட்டு ஏ என்னும் எழுத்தை நெடிலாக உருவாக்கினார்.

**ஆ) சிறுவினா**

**1)எழுத்துச் சீர்திருத்தத்தின் தேவை குறித்து எழுதுக.**

**எழுத்துச் சீர்திருத்தத்தின் தேவை:**

- ஓலைச் சுவடிகளிலும் கல்வெட்டுகளிலும் புள்ளிபெறும் எழுத்துகளை எழுதும்போது அவை சிதைந்துவிடும் என்பதால் புள்ளி இடாமல் எழுதினர்.
- ஓலைச் சுவடிகளில் நிறுத்தற் குறிகளும் பத்தி பிரித்தலும் கிடையாது.
- புள்ளி இடப்பட்டு எழுதப்படும் இடங்களில் புள்ளிகள் தெளிவாகத் தெரியாத நிலையில் அவற்றின் இடம் நோக்கி மெய்யா உயிர்மெய்யா, குறிலா நெடிலா என உணர வேண்டிய நிலை இருந்தது.
- இதனால் படிப்பவர்கள் பெரிதும் இடருற்றனர்.
- எனவே எழுத்துச்சீர்திருத்தம் வேண்டியதாயிற்று.

**2)தமிழ் எழுத்துகளில் ஏற்பட்ட உருவ மாற்றங்களை எழுதுக.**

**தமிழ் எழுத்துகளில் ஏற்பட்ட உருவமாற்றங்கள்:**

- நெடிலைக் குறிக்க ஒற்றைப்புள்ளிக்குப் பதிலாக இக்காலத்தில் துணைக்கால் (ா) பயன்படுகின்றது.

- ஐகார உயிர்மெய்யைக் குறிக்க எழுத்துக்கு முன் இருந்த இரட்டைப்புள்ளிக்குப் பதிலாக இக்காலத்தில் இணைக்கொம்பு(ை) பயன்படுகிறது.
- ஔகார உயிர்மெய்யைக் குறிக்க எழுத்துக்குப் பின் இருந்த இரட்டைப்புள்ளிக்குப் பதிலாக இக்காலத்தில் கொம்புக்கால்(ள) பயன்படுகின்றது.
- குற்றியலுகர, குற்றியலிகர எழுத்துகளின்மேல் புள்ளி இடும் வழக்கம் இக்காலத்தில் வழக்கொழிந்துவிட்டது.

**இ) நெடுவினா**

**1) எழுத்துகளின் தோற்றம் குறித்து எழுதுக.**

**<u>எழுத்துகளின் தோற்றம்:</u>**

**<u>தொடக்க நிலை:</u>**

- மனிதன் தனக்கு எதிரே இல்லாதவர்களுக்கும் பின்னால் வரும் தலைமுறையினருக்கும் தனது கருத்துகளைத் தெரிவிக்க விரும்பினான்.
- அதற்காகப் பாறைகளிலும் குகைச் சுவர்களிலும் தன் எண்ணங்களைக் குறியீடுகளாகப் பொறித்து வைத்தான்.
- இதுவே எழுத்து வடிவத்தின் தொடக்க நிலை ஆகும்.

**<u>ஓவிய எழுத்து:</u>**

- தொடக்க காலத்தில் எழுத்து என்பது ஒலியையோ வடிவத்தையோ குறிக்காமல் பொருளின் ஓவிய வடிவமாகவே இருந்தது.
- இவ்வரி வடிவத்தை ஓவிய எழுத்து என்பர்.

**<u>ஒலி எழுத்து நிலை:</u>**

- ஒவ்வொரு வடிவமும் அவ்வரிவடிவத்துக்கு உரிய முழு ஒலியாகிய சொல்லைக் குறிப்பதாக மாறியது.
- அதன்பின் ஒவ்வொரு வடிவமும் அச்சொல்லின் முதல் ஓசையைக் குறிப்பதாயிற்று.
- இவ்வாறு ஓர் ஒலிக்கு ஓர் எழுத்து என உருவான நிலையை ஒலி எழுத்து என்பர்.
- இன்று உள்ள எழுத்துகள் ஒரு காலத்தில் பொருள்களின் ஓவியமாக இருந்தவற்றின் திரிபுகளாக கருதப்படுகின்றன.

B.SANGEETHA M.A.,M.PHIL.,TAMIL TEACHER
Padasalai.Net

## துணைப்பாடம்: 1.4 சொற்பூங்கா

**1)தமிழில் ஓரெழுத்து ஒரு மொழிகளின் பெருக்கம் குறித்து இளங்குமரனார் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.**

**<u>தமிழில் ஓரெழுத்து ஒரு மொழிகளின் பெருக்கம் குறித்து இளங்குமரனார் கூறும் செய்திகள்:</u>**

- ஓர் எழுத்து மொழி எவை எனின் நெட்டெழுத்து ஏழே ஓரெழுத்து ஒருமொழி என்பார் தொல்காப்பியர்.
- நாற்பது நெடில்கள் ஓரெழுத்து ஒரு மொழியாக வரும் என்றார் நன்னூலார்.
- நொ,து என்னும் குறில்களையும் சேர்த்து நாற்பத்து இரண்டு என்றார்.
- பூ என்பது ஓரெழுத்து ஒரு மொழி. கா என்பதும் ஓரெழுத்து ஒரு மொழி.
- இவை இரண்டையும் இணைத்துப் பூங்கா எனக் கலைச்சொல் ஆக்கி வைத்துள்ளனர்.
- ஆ, மா, நீ மீ, பீ, ஊ, சே, தே இவ்வாறான ஓரெழுத்து ஒரு மொழிகளும் உள்ளன, ஆ, மா என்பவை இணைந்து ஆமா என்னும் கலைச்சொல் வடிவம் கொண்டமை பண்டைக் காலத்திலேயே உண்டு.
- மா என்பதும் ஓரெழுத்து ஒரு மொழிகளுள் ஒன்று. நாட்டிலுள்ள பெருமக்கள் பெரிதும் கூடும் அவையை மாநாடு என்கிறோம். பல குறுநிலங்களை உள்ளடக்கிய பெருநிலத்தை மாநிலம் என்கிறோம். இவ்வாறெல்லாம் இயல்பாக மா என்னும் ஓரெழுத்து ஒருமொழி மக்கள் வழக்கிலும் இலக்கிய வழக்கிலும் திகழ்கின்றது.
- ஈ என்னும் பொதுப் பெயர் ஓயாது ஒலி செய்யும் ஒலிக்குறிப்பைக் காட்டி நிற்கிறது. மாட்டு ஈ, தேன் எனப் பகுத்து வழங்கும் வழக்கம் உள்ளது.
- போ, வா, நீ, சூ, சே, சை, சோ என்பவை எல்லாம் இக்காலத்தில் அனைவரும் வழங்கும் சொற்களே.
- ஆன் என்பது ஆ ஆகியது, மான் என்பது மா ஆகியது.
- எட்டத்தில் போகிற ஒருவனை ஏய் என அழைத்தனர். ஏய் என்பது ஏ என வழக்கில் ஊறிவிட்டது.
- ஏவு என்னும் சொல் 'ஏ' என்று ஆனது மட்டுமன்றி 'எய்' எனவும் ஆயிற்று.
- தமிழில் ஓரெழுத்து ஒரு மொழிச் சொற்களின் பெருக்கம் நம் மொழியின் பழமை, உயிரோட்டம், பெருவழக்கு என்பனவற்றைக் கையில் கனியாகக் காட்டும். இத்தகைய தமிழ்மொழியின் சொற்களை, மொழிப்பற்றை மீட்டெடுத்தலே வழிகாட்டிகளுக்கு முதல் கடமையாய் நிற்கிறது.
- மொழிப்பற்றுள்ள ஒருவனே மொழியை வளர்ப்பான், அதன் இனத்தை, பண்பாட்டை காப்பான் என்று இளங்குமரனார் கூறுகிறார்.

## இலக்கணம்: 1.5 எழுத்துகளின் பிறப்பு

**அ) சிறுவினா**

**1)எழுத்துகளின் பிறப்பு என்றால் என்ன?**

**எழுத்துகளின் பிறப்பு:**

- உயிரின் முயற்சியால் உடலின் உள்ளிருந்து எழும் காற்றானது மார்பு, தலை, கழுத்து, மூக்கு ஆகிய நான்கு இடங்களுள் ஒன்றில் பொருந்தி, இதழ், நாக்கு, பல், மேல்வாய் ஆகிய உறுப்புகளின் முயற்சியினால் வேறுவேறு ஒலிகளாகத் தோன்றுகின்றன.
- இதனையே எழுத்துகளின் பிறப்பு என்பர்.

**2)மெய் எழுத்துகள் எவற்றை இடமாகக் கொண்டு பிறக்கின்றன?**

- வல்லின மெய் எழுத்துகள் ஆறும் மார்பை இடமாகக் கொண்டு பிறக்கின்றன.
- மெல்லின மெய் எழுத்துகள் ஆறும் மூக்கை இடமாகக் கொண்டு பிறக்கின்றன.
- இடையின மெய் எழுத்துகள் ஆறும் கழுத்தை இடமாகக் கொண்டு பிறக்கின்றன.

**2)ழகர, லகர, ளகர மெய்களின் பிறப்பு முயற்சி பற்றி எழுதுக.**

**ழகர, லகர, ளகர மெய்களின் பிறப்பு முயற்சி**

- ழகர மெய், மேல் வாயை நாக்கின் நுனி வருடுவதால் பிறக்கிறது.
- லகர மெய், மேல்வாய்ப் பல்லின் அடியை நாக்கின் ஓரங்கள் தடித்து நெருங்குவதால் பிறக்கிறது.
- ளகரமெய், மேல்வாயை நாக்கின் ஓரங்கள் தடித்துத் தடவுதலால் பிறக்கிறது.

B.SANGEETHA,M.A.,M.PHIL.,TAMIL TEACHER